[illegible] நூலகம்
11 FEB 1998
[illegible]

சூரிய காந்தி
SOORIYA GANDHI

விலை ரூபா 5-00

மலர் 1 ஞாயிற்றுக்கிழமை 8 - 2 - 1998 இதழ் 7

வினோவின் தரம்
என்றும் நிரந்தரம்

புதிய சிங்கப்பூர் டிசைன் நகைகள்
22 கரட் நகைகளைப் பெற
நம்பிக்கையான இடம்

வினோ நகைப் பூங்கா

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# விமானபடைத் தளபதியின் மீது தாக்குதல் தாரியின் இலக்கு!

## புலனாய்வு பிரிவினர் தெரிவிப்பு

நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல் விமானப் படைத் தளபதியை இலக்கு வைத்தே மேற்கொள்ளப்பட்டதாகப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு கொம்பனித் தெரு தற்கொலைக் குண்டுத் தாக்குதலானது விமானப் படைத் தளபதியை இலக்காகக் கொண்டே மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாக, கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

விமானப் படைத் தளபதியின் நடமாட்டத்தைத்தாக்குதல்க்காரர்கள் அவதானித்திருந்ததாக, கைதுசெய்யப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் மகளிர்பிரிவைச்சேர்ந்த ஒருவரிடமிருந்து பொலிஸார் பெற்றுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் நடந்த தற்கொலைக் குண்டுத்தாக்குதலை மேற்கொண்ட பெண் மட்டக்களப்பைச் சேர்ந்த தனேஷா இந்திராணி (25 வயது) எனவும், இவருடன் வாகனத்தில்வந்து காயமுற்ற நிலையில் வைத்தியசாலையில்

(6ஆம் சக்கம் பார்க்க)

## கிளிநொச்சி சண்டையில் 14 புலிகள் களப்பலி

### புலிகளின் குரல் அறிவிப்பு

நேற்று முன்தினம் கிளிநொச்சியில் இடம்பெற்ற மோதலில் பதின்நான்கு போராளிகள் வீரச்சாவடைந்ததாக புலிகளின் குரல் நேற்றிரவு அறிவித்தது. வீரச்சாவடைந்த புலிகளின் பெயர் விவரம் வருமாறு.

வீரவேங்கை நெடுமாறன் (சண்முகம் கிருஷ்னகுமார்- யாழ்ப்பாணம்)

வீரவேங்கை இளம்கிண்ணன் (லோறன்ஸ் உதே தண்ணீரூற்று)

வீரவேங்கை கலியபோல் (திருச்செல்வன் பிரதீப்குமார் ஒட்டு சுட்டான்)

வீரவேங்கை கலையரசு, (அலெக்ஸ் புருத்மன் கொலின்ஸ் மன்னார்)

வீரவேங்கை கோகுலராஜன் (கதிர்காமத்தம்பி சத்திய சீலன் மட்டகளப்பு)

ஆகியோரும் நேற்று முன்தினம் இடம்பெற்றமோதலில் வீரச்சாவடைந்தவர்கள். பட்டியலில் அடங்குவர்.

### அமைச்சர் பார்வையிட்டார்

நேற்றைய குண்டுவெடிப்பில் காயமுற்றவர்களை சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டீ சில்வா சென்று பார்வைபிட்டார். அத்துடன் இத்தாக்குதலில் வெளிநாட்டவர் எவரும் காயமடையவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

## கொழும்பில் கடும் சோதனை பல தமிழ் இளைஞர் யுவதிகைது

கொழும்பு கொம்பனித் தெருவில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலைத்தொடர்ந்து, கொழும்பு நகரில் இருநூறுக்கும் மேற்பட்ட இளைஞர்கள், யுவதிகள் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

கொழும்புநகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் பொலிஸாரும், இராணுவமும் கூட்டாக சோதனையை மேற்கெண்டனர். வத்தளை, பேலியகொடை, ஊறுகொடவத்தை, மட்டக்குளிய,முகத் ட்வாரம் ஆகிய பகுதிகளில் மேற்கொண்ட சோதனைகளின் போது விடுதிகளில் தங்கியிருந்த தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் பலர் குறித்த இடங்களில் தாம் தங்கியிருப்பதற்காகத் தெரிவித்த காரணங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லையென பொலிஸார் தெரிவித்தனர்.

குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து தலைநகருச்குள் பிரவேசிக்கக் கூடிய சகல நுழை வாயில்களிலும் விசேட காவலரண்கள் அமைக்கப்பட்டு சோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## நேற்று நான்கு சடலங்கள் பொலிசாரால் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையில் இராணுவத்தினரின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான இனம்தெரியாத நான்கு சடலங்களை சாவகச்சேரி பொலிசார் ஒப்படைத்துள்ளனர்.

கொடிகாமம் வரணியில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தின் பின்னர் அவ்விடத்தில் இருந்து இரு சடலங்களை இராணுவம் கண்டெடுத்து சாவகச்சேரி பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளது. இச் சடலங்கள் நண்பகல் பொலிசாரால் யாழ். போதனா வைத்தியசாலையிய் ஒப்படைக்கப்பட்டது.

இதேவேளை மந்துவில் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிப்பிரயோகத்தில் மேலும் இரண்டு சடலங்கள்

(6ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா தடைமுகாமில் அதிகாரிகள் பேச்சு

(வவுனியா)

வவுனியா நகரில் அகதிகள் முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ள மக்கள் இன்று நண்பகல் வவுனியா மாவட்ட பிரதேச செயலர் எஸ். கணேசுடன் தமது நிலை தொடர்பாக பேச்சுக்களை நடத்த இருப்தாக வவுனியாவில் இருந்து நேற்று மாலை கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

நீண்ட காலமா சுமார் பத்தாயித்துக்கும் மேற்பட்ட மக்கள் வவுனியாவில் தனியார் இடகளில் வசிப்பதற்கும், வவுனியாவை விட்டு

(6ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் கடும் மோதல் தொடர்கிறது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரடிப்போக்கில் தரித்து நிற்கும் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே கடும் மோதல் ஏற்பட்டதாகவும், படையினர் கிளிநொச்சியைத் தம் வசப்படுத்தும் நோக்குடன் முன்னேற முற்படும்போது இம்மோதல் வெடித்ததாகவும் புலிகளின் குரல் வானொலி தெரிவித்தது.

விடுதலைப் புலிகளின் கடும் தாக்குதலை அடுத்து படையினர் சடலமொன்றையும் ஆயுத தளபாடத்தையும் விடுதலைப்புலிகள் கைப்பற்றியுள்ளதாக அவ்வானொலி மேலும் தெரிவித்தது.

நேற்று முன்தினம் காலை ஒரு மணி முதல் பிற்பகல் மூன்று மணி வரை இத்தாக்குதல் நடைபெற்றது, இத்தாக்குதலில் சிறிலங்காபடையினருக்கு பலத்த இழப்பு ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து படையினர் பின்வாங்கி மீண்டும் மாலை 4-20 மணிபள

(6ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானம் இல்லாமல் அபிவிருத்தி இல்லை

### சுவிஸ் தூதுவர்

(மட்டக்களப்பு)

சமாதானம் இல்லாது ஒரு போதும் அபிவிருத்தி இல்லை என இலங்கைக்கான சுவிஸ் சிலாந்தின் தூதுவர் செல்வி மரியா ஹூபிஸ்ஸா தெரிவித்துள்ளார்,

மட்டக்களப்பில் அண்மையில் நடைபெற்ற அசம்பாவிதங்கள் தொடர்பாகப் பார்வையிடச் சென்றபோது அவர் இக் கருத்தைத் தெரிவித்தார்,

தொடர்ந்து யுத்தம் நடைபெற்றுக்கொண்டு இருக்கும் போது அபிவிருத்தி அப்பயில் நடத்த முடியா

(6ஆம் பக்கம் பார்க்க

# யாழ்' மருத்துவமனைக்கு அபிவிருத்திக் குழுவை நியமிக்குக

## அரச சார்பற்ற இணையம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையில் வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவை அமைக்குமாறு அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளருக்கு எழுத்துமூலமான வேண்டுகோள விடுத்துளளது.

யாழ் போதனா வைத்திய சாலையில் கடமை புரயும் சேவையாளர்கள் தமது சேவையின் மகத்துவத்தை உணராது நோயாளாகள் மீதும், நோயாளர்களை மருத்துவமனைக்கு அழைத்து வருவோர், சிகிச்சைக் களத்தில் தங்கி இருந்து சிகிச்சை பெறுபவர்களைப் பார்வையிட வருபவர்கள்மீதும் விருப்பத்திற்கும் சேவைக்கும் மாறாக நடந்துகொள்வதாகவும், எனவே இவர்களுக்கு தமது சேவையின் தாற்பரியம் றிறித்து விளக்கமளிப்பதற்கு இப்படியான அபிவிருத்தி சபை முக்கியமானது என இணையம் அனுப்பியவேண்டுகோளில் தெரிவித்துள்ளது.

சேவை மனப்பாங்குடன் நோயாளர் மீது பழகுவதினால் அவர்களின் நோய்களின் தாக்கம் பெரும்பங்கு குறையும் என்பது உளரீதியாகத் தெரிவிக்கப்படும் கருத்தாகும். எனவே இதனை நன்கு விள்ங்கப்படுத்தும்முகமாக இவ் அபிவிருத்தி சபை அமைப்பது பொருத்தமானது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை தேவையான ஆலோசனை மற்றும் விளக்க உரைகள் போன்றவற்றை இலவசமாக வழங்க அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் தயாராக இருப்பதாகவும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சுசந்திகாவுக்கு டங்கன் வைற் பரிசு

சுசந்திகா மூன்றாவது முறையாக டங்கன் வைற் பரிசைப் பெற்று சாதனை படைத்துள்ளார் சுசந்திகா ஜெயசிங்கா டங்கன் வைற் ஓட்டப்பந்தயத்தில் மூன்றாவது சுற்றில் வெற்றியீட்டி சாதனை படைத்துள்ளார்.

1997ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 8ம் திகதி ஏதென்ஸ் நகரில் நடை பெற்ற ஒலிம்பிக்கிற்கு சிபார்சு செய்யும் உலகப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் பெற்றுள்ளார். 2000ம் ஆண்டு அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் இடம்பெறவிருக்கும் ஒலிம்பிக் போட்டிகளிலும் இவர் பதக்கம் பெறுவார் என எதிர் பார்க்கப்படுகிறது.

மார்ச் மாதம் முதலாம் திகதி டங்கன் வைற் தனது எண்பதாவது பிறந்த தினத்தன்று சுசந்திகாவுக்கு பரிசு வழங்கும் வைபவத்தை விமரிசையாகக் கொண்டாடவுள்ளார். டங்கன் வைற் ஒலிம்பிக்கில் வெள்ளிப்பதக்கம் பெற்ற ஒரேயொரு இலங்கையர் என்பது குறிப்பிடத்தக்கது.


## நிருபர்கள் தேவை

"சூரியகாந்தி" தினசரிக்கு

வட்டுக்கோட்டை,
சாவகச்சேரி
கோப்பாய்

பகுதிகளுக்கு பிரதேச நிருபர்கள் தேவை. அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:
ஆசிரியர், "சூரியகாந்தி"
68/1, இராசாவின் தோட்ட வீதி,
யாழ்ப்பாணம்.



அழகும் நவீனமும் நிறைந்த
தங்க வைர நகைகள்
22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு
குறித்த தவணையில்
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்
சிங்கப்பூரில் இருந்து வெளியாகும்
புதிய டிசைன் நகைகளை
உடனுக்கு உடன். பெற்றுக்கொள்ள

சாரங்கா
நகை மாடம்
177/4 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தலைமை ஸ்தாபனம்:
அருள்முருகன் நகை அகம்
96/2 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

கிளை ஸ்தாபனம்:
சிவா நகை மாடம்
யாழ் வீதி, சாவகச்சேரி.


## மலர் வெளியீடு

(பருத்தித்துறை)

கரவெட்டி பிரதேச மலர் ஒன்றை வெளியிடுவதற்கான நடவடிக்கைகளை சரவெட்டி பிரதேச சனசமூக நிலையங்களின் சமாசம் மேற்கொண்டுள்ளது'

இக் கரவெட்டிப் பிரதேக மலர் கரவெட்டிப் பிராதச மக்களின் பல்வேறு வகையான சிறப்பம்சங்களையும் உள்ளடக்கியதாக இருக்கும் என கரவெட்டி பிரதேச சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. எஸ். சுப்பிரபணியம் தெரிவித்தார்.

## கிராமிய அபிவிருத்தி கருத்தரங்கு

(பருத்தித்துறை)

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனமும், வலி. தெற்கு சனசமூக நிலையங்களின் சமாசமும் இணைந்து கிராமிய அபிவிருத்திக் கருத்தர்ங்கொன்றை 8-ம் திகதி இராமநான் கல்லூரியில் நடாத்துகின்றன.

வலி. தெற்கு சனமூக நிலையங்களின் சமாசத் தலைவர் திரு. என் தேவச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கிலே யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. ரி. வி. சிருஸ்ணசாமி பிர்தம விருந்தினராகவும் வடபிரதேச நல்லொழுக்க சம்மேளன கணக்காளர் திரு. கே. நாகராசா, உடுவில் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி. சிவயோகம் வடபிரதே நல்லொழுக்க சம்மேளன தலைவர் திரு. வி. சிவலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்கின்றனர்.

## வலிகாமம் மேற்கில் நீர் விினியோகத் திட்டம்

யாழ்ப்பாணம்

வலிகாமம் மேற்கு பகுதியில் நான்கு தண்ணீர் விநியோக திட்டங்களை புனரமைப்பு செய்வதற்கு ஜெர்மன் தொழில் நுட்ப நிறுவனம் முன்வந்துள்ளது.

பொன்னாலை, அராலி வடக்கு, அராலி மேற்கு சங்கரத்தை ஆகிய பகுதியில் அமைந்த நண்ணீர் திட்டத்திற்கான வேலைத் திட்டம் தொடர்பாக தற்போது மதிப்பீடுகள் செய்யப்பட்டு விட்டதாகவும் விரைவில் இத்திட்டம் நிறைவு படுத்தப் படும் எனவும் எதிர் பார்க்கப் படுகின்றது.


யாழ். நகரில்
கம்பியூட்டர்
ரென்சில் கட்டிங்,
தமிழ், ஆங்கில,
தட்டச்சு, றோணியோ
வேலைகள்
சிறந்த முறையில்
செய்துகொள்ள
எம்மை நாடுங்கள்.
தயா அச்சகம்
138 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


## இருபது லட்சம் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம்

இலத்தின் அமெரிக்க நாடுகளில் இருபது இலட்சத்திற்கும் அதிகமான சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப் படுவதாக அமெரிக்க நாடுகளுக்கு இடையேயான சிறுவர் பாதுகாப்பு அமைப்பொன்று தெரிவித்துள்ளது.

இதைத் தவிர அமெரிக்காவில் மாத்திரம் மூன்று இலட்சம் சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுகின்றார்கள் என்றும் இந்த அமைப்புத் தெரிவித்துள்ளது,

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் பெற்றோரைப் பிரிந்து வாழும் சந்தர்ப்பங்கள், வறுமை ஆகியவற்றின் காரணமாக இத்தகைய சம்பவங்கள் இடம் பெறுவதாகவும் அவ்வமைப்புச் சுட்டிக்காட்டியுள்ளது,

## சோனியா எமது மருமகள் இரு இந்திய கிராமவாசிகள்

சோனியா காந்தி வெளிநாட்டுப்பெண் அல்ல அவர் எமது மருமகள் இவ்வாறு வட இந்திய கிராம வாசிகள் இருவர் கூறியுள்ளனர்.

அண்மையில் காங்கிரஸ் கட்சியினர் தேர்தல் பிரசாரம் மேற்கொண்டபோது வட இந்திய கிராமவாசிகள் இருவரிடம் சோனியா காந்தி ஒரு வெளிநாட்டுப்பெண்ணா என்று கேட்டபோதே அவர்கள் இவ்வாறு கூறியுள்ளனர்.

## அணிசேரா மாநாடு தென்னாபிரிக்காவில்

அணிசேரா நாடுகளின் உச்சிமாநாடு எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ளது. அண்மையில் கொழும்பில் நடைபெற்ற அணிசேரா நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளின் உத்தியோகப் பற்றற்ற கூட்டத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. இலங்கையின் சுதந்திரப் பொன்விழாவில் அணிசேரா நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## இரண்டு வீத மாணவர்களே பல்கலைக்கழகம் செல்கின்றனர்

இலங்கையில் க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் இரண்டு சத விகிதத்தினரே பல்கலைக்கழகம் செல்சின்றனர். இவ்வாறு அண்மையில் யாழ் திருமறைக் கலாமன்றக் கேட்போர் கூடத்தில் உரையாற்யாற்றிய திரு. கந்தவேள் தெரிவித்தார்.

இவரைத் தொடர்ந்துஉரையாற்றிய யாழ் பல்கலைக் கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் கணேசலிங்கன், எமது நாடு விஞ்ஞான தொழில் நுட்பத் துறைகளில் முன்னேற்றம் அடைற வேண்டும் என்றார். அவர்மேலும் தனதுரையில் வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் தமிழை மறந்துவிட்டார்கள் எனவும் இன்றைய சமுதாயம் பணத்தை மையமாகக் கொண்டே செயல்பட்டு வருகிறது எனவும் குறிப்பிட்டார்.

நாம் பணம் சம்பாதிக்கும் எண்ணத்தை விடுத்து புண்ணியத்தைச் சம்பாதிக்கும் முயற்சியில் ஈடுபடவேண்டுமெனவும் வியாபாரம் செய்வது பற்றி தான் வகுத்த ஒரு கற்கைநெறியை யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு நாம் தயாரித்த கற்கைநெறிபோல் கற்பிக்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும் பேராசிரியர் கணேசலிங்கன் தெரிவித்தார்.

## கயரோகத்தின் தாக்கம் அதிகரித்து வருகிறது

வரலாற்றில் முன் எப்போதும் இல்லாதவாறு இந்த வருடம் உலகம் முழுவதிலும் கயரோகத்தினால் இறப்பு அதிகரிக்கும் என நேபாளத்தில் நடந்த கயரோகம் பற்றிய கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது, உலக சனத்தொகையில் வருடந்தோறும் ஒரு சதவீதமே கயரோகத்தால் பாதிக்கப்பட்டனர்,

கடந்த வருடம் 90 இலட்சம் பேர் கயரோகத்தால் பாதிக்கப்பட்டனர், இதில் 30 இலட்சம் பேர் மரணித்தனர், இந் நோயைத் தடுப்பதற்காக குழந்தைகள் பிறந்தவுடன் பீ,சி,ஜி எனும் தடை மருந்து ஏற்றப்பட்டு வருகிறது,

## காரைநகர் மக்களுக்கு பாவனைப் பொருட்கள்

இராணுவ நடவடிக்கையினால் இடம்பெயர்ந்து மீளவும் காரைநகரில் குடியேறிய 399 குடும்பங்களுக்கு வீட்டு பாவனைப் பொருட்களை அகதிகளுக்கான புனர்வாழ்வு நிறுவனம் வழங்கியுள்ளது.

காரைநகரை விட்டு வெளியேறி மீண்டும் அப்பகுதியில் குடியேறியவர்களுக்கும் இவ் உதவிப் பொருட்கவ் வழங்கட்டன..

## இடமாற்றம்

பருத்தித்துறை நகரசபை அலுவலகம் பருத்தித்துறை நகரப் பகுதியிலுள்ள கட்டடமொன்றுக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளது. தற்போது இவ் அலுவலகம் தும்பளைச் சந்தியில் உள்ள தனியார் கட்டடமொன்றில் இயங்கி வருகின்றது.

## சீனாவில் விஷ சாராயம்

சீனாவில் நேற்றையதினம் விஷ சாராயம் அருந்தியதால் நாற்பத்தியேழு பேர் பலியானார்கள். இச் சம்பவம் தொடர்பாக சீனப் பொலிசார் இரண்டு பேரைக் கைதுசெய்துள்ளனர்.

## பருத்தித்துறைக்கு பிரேத வண்டி

(பருத்தித்துறை)

பருத்தித்துறைப் பிரதேச சபைக்கு பிரேத வண்டில் ஒன்று வந்து சேர்ந்துள்ளது. பருத்தித்துறைப் பிரதேச சபைப் பகுதி மக்கள் இப் பிரேத வண்டிலைப் பயன்படுத்தலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

''சோ'' என்ற பெயரில் புகழ் பெற்றிருக்கும் எஸ்.ராமசாமி பல துறைகளில் அபாரமான திறமை படைத்தவர்.

சினிமா நடிகர்; நையாண்டியாக நல்ல அரசியல் விமரிசனங்களை எழுதுபவர்; புகழ் பெற்ற வழக்கறிஞர்.

''துக்ளக்'' பத்திரிகையின் ஆசிரியர்.

# "சோ" சொல்கிறார் "துக்ளக்" பிறந்தது எப்படி?

**''சோ''** என்ற பெயரில் புகழ் பெற்றிருக்கும் எஸ். ராமசாமி பலதுறைகளில் அபாரமான திறமை படைத்தவர்.

சினிமா நடிகர், நையாண்டியாக நல்ல அரசியல் விமரிசனங்களை எழுதுபவர், புகழ் பெற்ற வழக்கறிஞர்.

''துக்ளக்'' பத்திரிகையின் ஆசிரியர்.

எனக்குப் படிக்கும் போதும் நோக்கம் கிடையாது. நடுவிலும் நோக்கம் இருந்ததில்லை இன்றைக்கும் நோக்கம் கிடையாது.

வருகிறதை அப்படி அப்படியே செய்து கொண்டு இருக்கிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஒருமுறை மாணவர் கூட்டம் ஒன்றிற்குச் சென்றிருந்தேன். சினிமா நாடகத்தினால் நான் பிரபலமாக இருந்ததால் இந்த மாதிரி அமைப்புக்கள் எனக்கு அடிக்கடி வரும்.

அந்தக் கூட்டத்தில்நேருக்கு நேர் நிகழ்ச்சி ஒன்று நடத்தினார்கள். அப்போது அவர்கள் கேட்ட எல்லாவிதமான கேள்விக்ளுக்கும் பதில் சொன்னேன்.

திரும்பி வரும்போது என் நண்பர்கள் ''அரசியல் பொருளாதாரம் அந்நிய விவகாரம் என்று எதைப் பற்றிக் கேட்டாலும் பதில் சொல்கிறாயே..,.. நீ உன்னைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய்? தெரியவில்லை என்றால் தெரியவில்லை என்று பதில் சொல்ல வேண்டியது தானே'' என்று கேட்டார்கள்.

''பதில் சொல்வதென்ன.. எழுதக்கூட எழுதுவேன்'' என்று நான் பதில் சொன்னேன்.

''நீ எழுதினால் அதை எவன் படிப்பான். எந்தப் பத்திரிகைக்காரன் பிரசுரம் செய்வான்'' என்று அவர்கள் கேட்டார்கள்.

''யாரும் போடவில்லை என்றால் நானே ஒரு பத்திரிகை ஆரம்பித்து விடுவேன்'' என்று கூறினேன்.



இப்படியே பேச்சு போய் கடைசியில் பந்தயம் வைக்கும் நிலைக்கு வளர்ந்து விட்டது.

என்னால் பத்திரிகை ஆரம்பிக்க முடியாது என்று அவர்கள் கூற ''முடியும்'' என்று நான் பிடிவாதம் பிடித்தேன்.

பந்தயம் வைத்தோம்.

சென்னை வந்த பிறகு இதைப் பற்றித் தீவிரமாகச் சிந்தித்தேன். விஷயம் பெரிதில்லை என்றாலும் பந்தயம் என்று வந்துவிட்டதால் அதில் எப்படியும் ஜெயிக்கவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டு விட்டது.

உடனே ''ஹிந்து'' பத்திரிகையில் ஒரு விளம்பரம் கொடுத்தேன்.

''நான் பத்திரிகை ஆரம்பித்தால் வாங்குவீர்களா, இல்லை நஷ்டப்பட வைத்து விடுவீர்களா?'' என்று அந்த விளம்பரத்தில் வாசகர்களிடம் கேட்டிருந்தேன்.

''ஹிந்து'' பத்திரிகையில் வெளிவந்த முதல் தமிழ் விளம்பரம் அதுவாகத்தான் இருக்குமென்று நினைக்கின்றேன்,

ஆரம்பிக்குமாறு என்னைஉற்சாகப்படுத்தி நிறையக் கடிதங்கள் வந்தன.

தொழில் செய்துவரும் என் நண்பன் ஒருவனிடம் இது பற்றி கலந்து பேசினேன்.

''உனக்குப் பத்திரிகைத் துறையில் எந்த அனுபவமும் கிடையாது. நீ பிரெஸ்ஸினுள் நுழைந்து பார்த்தது கூட இல்லை. தெரியாத தொழிலில் ஈடுபட்டு கையைச் சுட்டுக் கொள்ள விரும்பவில்லை'' என்று கூறி ஒதுங்கி விட்டான்.

சொந்தப் பொறுப்பில் பத்திரிகை ஆரம்பிக்க எனக்குத் தைரியம் இல்லை.

ஆகவே இந்தத் திட்டத்தைக் கைவிடுவது என்று முடிவு செய்தேன்.

அப்போது -

''ஆனந்த விகடன்'' ஆசிரியர் பாலசுப்பிரமணியன் என்னைக் கூப்பிட்டார்.

அவருடைய உறவினர் சிலர் ஒரு பத்திரிகை ஆரம்பிக்கவிரும்புவதாகவும்அதற்கு ஆசிரியர் பொறுப்பேற்று என்னால் நடத்தித்தர முடியுமா என்றும் கேட்டார். தேதி நினைவில்லை. கிறிஸ்துமஸ்ஸீக்கு முன்னால் நடந்தது.

நான் சம்மதித்தவுடன் அவர் ''பத்திரிகையை எப்போது ஆரம்பிக்கலாம்?'' என்று கேட்டார்.

நான் பொங்கலன்று ஆரம்பிக்கலாம் என்று கூறினேன்.

''பொங்கலுக்கு இன்னும் நாட்கள் குறைவாக இருப்பதால் பத்திரிகையை தமிழ் லருடப்பிறப்புக்கு பின்னர் தொடங்கலாம்'' என்று அவர் கூறினார்.

''தொடங்கினால் பொங்கலன்று தொடங்குங்கள். வருடப்பிறப்பென்றால் எனக்கு அதற்குள் வேறு எதிலாவது ஆர்வம் வந்து அதற்குப் போய்விடுவேன். பத்திரிகைத் துறைக்கு நான் வரமாட்டேன்'' என்று கூறினேன்.

கடைசியில் அவர் என் விருப்பத்துக்கு சம்மதித்தார்.

''துக்ளக்'' வெளிவந்தது.

---

ராஜாஜி இந்த நூற்றாண்டின் ஜனகர்! கூர்ந்த மதியும் ஆழ்ந்த சிந்தனையும் உடையவர்! அவர் எழுத்திலே எப்போதும் எளிமை இருக்கும்.

பல ஆண்டுகளுக்கு முன்னால் ''வால்மீகி ராமாயணத்தை'' தொடராக ''கல்கி''யில் எழுதினார். அப்போது அவர் எழுதிய முகவுரை இது!

வால்மீகி காலத்தில் சாதாரண மனிதனாக இருந்த ஸ்ரீராமன் கம்பருடைய காலத்தில் மஹா விஷ்ணுவின் அவதாரமாக கருதப்பட்டு உயர்ந்த நிலையை அடைந்ததையும் சொல்லுகிறார்!

# வால்மீகியும் கம்பரும்

- ராஜாஜி

**ஆ**ண்டவன் விளையாட்டின் ரகசியத்தை யாரே அறிவார்! நம் செயல்கள் அனைத்தும் அவ் விளையாட்டில் அடங்கிய ஓர் அற்ப அம்சம்! வால்மீகி பாடிய ராம சரிதத்தை நம் மக்களுக்கு எளிய பேச்சு நடையில் சொல்லலாம், என்று எண்ணிப் பண்டிதனல்லாத நான் ஆரம்பிக்கிறேன். கம்பர் பாடிய அவையடக்கத்தை வைத்துச் சொல்லுகிறேன், பெரும் பாற்கடலை ஒரு பூனையானது மெல்ல உருட்டிக் குடித்து விடலாம் என்று எதிர்பார்ப்பது போலாகும் நான் வால்மீகி ராமாயணத்தை எளிய முறையில் சரியாக எடுத்துச் சொல்ல முயல்வது, ஆயினும் கடலைத் தாண்டிய ஆஞ்சநேயன், ராம கதையை எந்தவிதமாகயார் சொல்ல முயன்றாலும் உதவுவான்.

**இரண்டு வகையான நூல்கள்**

பக்தியுடன் ஒருவன் செய்யும் பணியில் பெரியோர்கள் குற்றம் பார்க்கமாட்டார்கள், உற்சாகப்படுத்தி, பணியைப் பயன்படும்படி செய்வார்கள்.

பிராணிகளுக்கு எலும்பும் சதையும் இருப்பது போல் தாவரங்களுக்கும் உண்டு.

சில தாவரங்களுக்கு நம்மைப் போல்-உள்ளே எலும்பும் வெளியே சதையும் இருக்கும். வேறு சிலவற்றுக்கு உள்ளே சதையும் வெளியே எலும்பும் அமைந்திருக்கும். மா, பலா, புளி தேக்கு முதலிய மரங்களின் சதை அவற்றின் பச்சைப் பட்டை. மரத்தின் உயிர்ச் சத்து அந்தப் பட்டையின் வாயிலாகவே செல்கிறது. மரத்தின் உள்ளே நின்று பாரத்தைத் தாங்கும் நடு மரம் அதனுடைய எலும்பாகும். ஆனால் மரத்துக்கு வேண்டிய உயிர்ச்சத்து மரத்தின் பச்சைப் பட்டையில் தான் பாய்ந்து வருகிறது. எலும்பு உள்ளேயும் உயிர்ச் சத்து பச்சைப் பட்டையிலுமாக இந்த வகைத் தாவரங்களின் ஜீவனம் நடைபெறுகிறது.

இதற்கு நேர்மாறாக இருப்பது வாழை, தென்னை, பனை, கமுகு, நெல், புல், சோளம், கரும்பு இவைகளின் அமைப்பு வெளிப்புறத்தில் எலும்பு, உள்ளே தண்டில் உயிர். பனை, தென்னை, வாழை, கரும்பு இவ்வகைத் தாவரங்களைப் போல் பிராணி வர்க்கத்திலும் ஆமை, சங்கு, சிப்பி, கிளிஞ்சல் முதலிய பிராணி வகைகள் உள்ளே உயிரும் வெளியே ஓடுமாக இருக்கின்றன. கிளிஞ்சல் சங்கு முதலிய பொருள்களை நாம் அந்தப் பிராணிகள் செத்த பின்னரே உபயோகப்படுத்து



கிறோம். ஆனால், நீரில் உயிருடன் வாழும்போது ஓட்டிற்குள் உயிரும் சதையும் இருக்கும். நம்முடைய எலும்பு உள்ளே இருப்பது போல் இவற்றின் வெளியோடு அவற்றின் எலும்பு உயிரும் உணர்ச்சியும் சதையும் ஓட்டுக்குள் மூடிக் கிடக்கப்பட்டிருக்கும்.

இவ்வாறே நூல்களையும் இரு வகையாக வகுக்கலாம். ஒரு வகைக்கு உயிர் அதன் வடிவமே உயிர். விஷயங்களை விளக்கித் தரும் நூல்களான ரசாயனம், வைத்தியம், தேச சரித்திரம், பூகோளம், கணிதம் முதலியவை நூல்களின் பொருளில் உயிர் கொண்ட வகை. பாடல்களும் பெருங்காவியங்களும் கவிஞர் தந்த வடிவழகிலேயே தம் உயிரை வைத்து நிற்கின்றன.

செய்யுளைப் பிரித்து உரை நடையில் எழுதினால், அந்தப் பொழிப்புரையில் உயிர் இருக்காதுகவிஞர் தொடுத்த வடிவத்தைச் சேமித்து விட்டால் உயிர் மாண்டு போகிறது. ஒரு கணிதநூலோ அல்லது வைத்தியநூலோ அவ்வாறு அல்ல. மனனம் செய்வதற்காக ஆசிரியர் செய்யுள் வடிவம் தந்திருந்தாலும், பழைய நாட்டுக் கணித நூல்களும் வைத்திய நூல்களும் இவ்வாறே செய்யுள் உருவத்தில் அமைக்கப்பட்டு வந்தன- அவற்றை விரித்து உரை நடையில் எழுதினாலும் பொருளிலே உயிர் கிடப்பதால் அதன் உயிர் நீங்காது.

கம்பர் பாட்டையோ அல்லது பாரதியார் பாட்டையோ உரைநடையில் எழுதினால் உயிரில்லாத உடல் தான் நிற்கும். பொருளுக்குச் சேதமில்லையாயினும், உரை நடையில் மாற்றி எழுதிய பாடல் உயிர் இழந்த பிராணியைப்போல் கிடக்கும்.

அதனோடு பதவுரையும் 'விசேஷ' உரையும், இலக்கணக் குறிப்பும் எழுதிவிட்டாலோ, அது சவச்சோதனை ஆலயமாகத்தான் பயன்படும். பிரேத பரிசோதனையில் அறிவு வளர்ச்சிக்கு மிக்க பயன் உண்டு. ஆனால் அழகு இல்லை. உரைநடையில் மொழி பெயர்க்கப்பட்ட பாடலில் ஒளியில்லை, உயிரில்லை, பாடலின் தனிப் பயன் இல்லை.

**சில நூல்கள் இருவிதத்திலும் பயன்தரும்**

எவ்வாறாயினும் ''யானை இருந்தாலும் ஆயிரம் வெள்ளி, இறந்தாலும் ஆயிரம் வெள்ளி'' என்பதுபோல் சில நூல்கள் இரு விதத்திலும் பயன்தரும். காவியங்களையும் பாடல்களையும் அந்நியருக்காக மொழி பெயர்ப்பது தற்கால வழக்கத்தில் பதிந்து போயிருக்கிறது. தமிழருங்கூடக் கம்பனையும் பாரதியையும் திருக்குறளையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பதில் மிகவும் ஈடுபடுகிறார்கள். சில தமிழர் அவ்விதம் மொழிபெயர்த்ததைப் படித்தும் வருகிறார்கள். மொழிபெயர்த்த ராமாயணத்துக்கும் இறந்து போன யானையைப்போல் கொஞ்சம் விலை உண்டு என்பதைச் சொல்விளக்குவதற்காகவே இந்த நீண்ட முன்னுரை.

**வால்மீகி பகவான் நூல்வடிவம் கொடுத்தார்.**

வால்மீகி பகவான் ராமாயணம் பாடிய காலமும், ஸ்ரீராமச்சந்திரன் அவதரித்து இம்மண்ணுலகில் வாழ்ந்த காலமும் ஒன்றே என்பது புராணம் வாசிப்பவர்களுடைய பரம்பரைக் கொள்கை. உலக அனுபவத்தை வைத்து ஆராய்ந்து யோசித்தால், வால்மீகி ரிஷியானவர் ராமாயணத்தைப் பாடியதற்கு முன்னமேயே, அதாவது புராண காலந்தொட்டே, சீதாராம சரித்திரம் மக்களிடையே எழுத்து வடிவம் பெறாமலே பல நூற்றாண்டுகள் வாய்வழிக் கதையாக வழங்கி வந்திருப்பதாகத் தோன்றுகிறது. கர்ணபரம்பரையாக முன்னமேயே இருந்த ராம சரிதத்தை எடுத்துக்கொண்டு அதற்கு வால்மீகி பகவான் நூல் வடிவம் கொடுத்தாற்போல் தோன்றுகிறது. அதனாலேயே கதையில் பல சிக்கல்கள் ஏற்பட்டதென்றும் ஊகிக்கலாம். வாலியைக் கொன்ற முறை - அதில் காணும் நியாயக் குறை, சீதையைக் காட்டுக்கு அனுப்பிய அநீதி, இவை போன்று இன்னும் பல சிக்கல்கள்.

**கடவுளாக வேலை செய்யவில்லை.**

வால்மீகி ரிஷியின் காவியத்தில் இராமனுடைய நடவடிக்கைகளை ஈசுவர அவதாரமாக வைத்து எழுதவில்லை. சில அதிகாரங்களிலும், இங்குமங்கும் சுலோகங்களிலும், தெய்வ அவதார விஷயத்தைச் சொல்லி வந்தாலும், மொத்தத்தில் வால்மீகி ராமாயணத்தில் காணப்படும் ராமன் ஒரு சிறந்த ராஜகுமாரன், வீரபுருஷன், அபூர்வமான தெய்வீக நற்குணங்கள் பெற்றவன். அம் மட்டே! கடவுளாக வேலை செய்யவில்லை.

**கம்பரோ துளசிதாசரோ மீண்டும் ராமனை எப்படி வெறும் வீரனாக வைத்துப் பாட இயலும்?**

வால்மீகி முனிவரின் காலத்திலேயே ஸ்ரீ ராமனைப்பற்றிய அவதாரக் கொள்கை ஓரளவு ஜனங்களின் மனதில் இருந்து வந்தது. வால்மீகி இராமாயணம் இயற்றிய பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு கம்பரும் துளசிதாசரும் ராமாயணம் பாடினார்கள். இதற்குள் ஸ்ரீ ராமன் மகாவிஷ்ணுவின் அவதாரமே என்பது நாட்டிலே நன்றாக ஊர்ஜிதப்பட்டுப்போன கொள்கையாகிவிட்டது. ராமன் என்றாலும் கிருஷ்ணன் என்றாலும் மகாவிஷ்ணுவே: மகாவிஷ்ணு என்றால் ராமனே, கிருஷ்ணனே-இந்த

(4ஆம் பக்கம் பார்க்க)

# வால்மீகியும் கம்பரும்...

நிலைக்கு ஜனங்களின் கொள்கை வந்துவிட்டது. இதற்கு ஏற்பப் பக்தியும் கோயில்களும் வழிபாடும் ஏற்பட்டு ஸ்திரமாகிவிட்டன,

பக்தர்களுடைய நம்பிக்கையும் வழிபாடும் இவ்வாறு பரிணமித்துவிட்ட பிறகு கம்பரோ துளசிதாசரோ மீண்டும் ராமனை எப்படி வெறும் வீரனாக வைத்துப்பாட இயலும்? அப்படிப்பாட முயன்றாலும் அது வீணாகும். கம்பரும் துளசிதாசரும் பரிபூரண பக்தர்கள், ஆழ்வார்களேயாவார்கள. அவர்கள் தற்கால சரித்திர ஆராய்ச்சியாளர் அல்லது நெடுங்கதை எழுத்தாளர்களைப்போன்றவர்கள் அல்ல! ராமாவதாரத்தை வால்மீகியைப் போல் வெறும் ஒரு வீரபுருஷனைப்பற்றிய கதையாக எழுத முடியாத நிலையிலும், காலத்திலும் கம்பரும் துளசிதாசரும் பாடினார்கள். ராமனை மானிடப் பிறவியில் அடக்கக் கம்பருடைய பக்தி இடம் தராது. ஆனபடியால் கம்பராமாயணத்தில் அடிக்கடி, மிக ரசமான இடங்களில் ராமன் மகாவிஷ்ணுவே, கடவுளே, அனைத்திலும் பரவி நிற்கும் பரம்பொருளே என்று வைத்து மனத்தை உருக்கும் முறையில் அற்புத அழகோடு பாடியிருக்கிறார்,

## இன்னொரு வித்தியாசம்

காலத்துக்கும் சூழ்நிலைக்கும் தக்கவாறு உண்மைக் கவிஞர்கள் பாடமுடியுமேயொழிய, வெறும் வற்றல் ஆராய்ச்சிகளைப் பாட்டாகப் பாட இயலாது,

வால்மீகி இராமாயணத்துக்கும் கம்ப ராமாயணத்துக்கும் மற்றொரு பெரும் வித்தியாசம், வால்மீகி பகவான் பாடிய நூல் தமிழ் அகவற்பா முறையில் அமைந்தது என்று சொல்லலாம். கம்பர் பாடியது நிருத்தியத்துக்குத் தகுந்த பாட்டு. ஆங்கிலத்தில் சொல்வோமானால், வால்மீகி ராமாயணம் கம்பீர நாதம் பொருந்திய (பிளாங் வேர்ஸ்) என்றும், கம்பராமாயணம் ஒரு (லிரிக்) என்றும கூற வேண்டும். கம்பருடைய பாட்டுக்கள் ஒவ்வொன்றும் எதுகையும் மோனையும் கலந்து, பளிச்சுப் பளிச்சென்று ஆபரணங்களைப் பூண்ட மங்கையின் ஆடலைப்போல் மின்னித்துள்ளிநடனமாடுகின்றது. தெய்வீக அவதார விஷயத்தை வைத்து உண்டாகும் உணர்ச்சியுடன் நடனச்சுவையும் கலந்து கம்பருடைய ராமாயணம் பேரழகு அடைந்து விளங்குகிறது. ஆனால், அதைத் தமிழ் மக்கள் மட்டுமே அனுபவிக்க முடியும். அதன் அழகு மற்றவர்களுக்குச் சரியாக விளங்காது. கம்ப ராமாயணத்தை, அந்நிய மொழியில் பெயர்த்து எழுதுவதிலாவது தமிழ் செய்யுள் உருவத்திலிருந்து வசனமாக்குவதிலாவது பெரும் பயன் ஒன்றுமில்லை. வசனமாக எடுத்துச்சொல்லி விளக்கிவிட்டு உடனே சரியான முறையில் பாட்டைப் பாடினால் நல்ல பயன் ஏற்படும். டி. கே. சி. மறைந்தபின் இதைச்சொல்லித்தான் என்ன பயன்?


## நியூ விதுஷா நகை மாடம்

என்றுமே எழில் குன்றா
22 கரட் தங்க நகைகள்

நாகரீக நங்கையர்க்கு
நவீன டிசைன்கள்

நம்பிக்கை நாணயம் உத்தரவாதம்
சிங்கப்பூரிலிருந்து நேரடியாக தருவிக்கப்பட்ட
நவீன டிசைன் 22 கரட் நகைகள் பெற்றிட

**நியூ விதுஷா நகைமாடம்**
191. எச். கே. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்,



## மாதாந்த பயிற்சிப் பரீட்சை

இடம்: விக்னா கல்வி நிறுவனம்
(பரீட்சை 01)

காலம்: 10-02-98 செவ்வாய்க்கிழமை
காலை 9.00 மணி

- ஆண்டு 6 முதல் சாதாரண தரம் வரை மாதத்தின் கடைசிச் சனி, ஞாயிறு தினங்களில் இப் பரீட்சை நடைபெறும்.
- எமது நிறுவனத்தில் கல்வி கற்காத மாணவர்களும் இப் பரீட்சைக்குத் தோற்றலாம்.
- இப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளவும். தவறின் எக் காரணம் கொண்டும் பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.
- இப்பரீட்சை முன் கூட்டியே எமது நிறுவனத்தில் பதிவு செய்த கல்வி நிறுவனங்களிலும் நடைபெறும். பதிவு செய்து கொள்ளாத கல்வி நிறுவனங்கள் உடன் தொடர்பு கொண்டு பரீட்சை நடைபெறுவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளலாம்.
- கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி ஆகிய மூன்று பாடங்களிலும் பரீட்சை நடைபெறும்.
- வினாத்தாள்களைப் பெறவிரும்புவோர் விடைத்தாள்களுடன் பரீட்சை முடிவடைந்த பின் எமது காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விக்னா கல்வி நிறுவன்ம்
பரீட்சைப்பகுதி 01
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


# பரிசுப் போட்டி

சென்ற 5 ஆம் திகதி அறிவிக்கப்பட்ட ஆயிரம் ரூபா பரிசுப் போட்டியின் பொருத்தமான விடை

**ஒ - ஒன்று, இ - இரண்டு, மூ - மூன்று, நா - நான்கு, ஐ - ஐந்து**
**ஆ - ஆறு, ஏ - ஏழு, எ - எட்டு, ஒ - ஒன்பது, ப - பத்து**

எமது நிபந்தனைகளுக்கமைய பொருத்தமான விடைகளை அனுப்பியிருந்தோர் 89 வாசகர்கள். எனவே 1000 ரூபாய் பரிசு ஒவ்வொருவருக்கும் தலா 11 ரூபாய் 25 சதம் வீதம் பகிர்ந்தளிக்கப்படும்.

வெற்றி பெற்ற அனைவரும் தமது பரிசுத் தொகையை 11 - 02 - 98ற்கு முன்பாக அலுலலக நேரத்தில் உரிய ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். மேற்படி போட்டியில் வெற்றி பெற்ற மற்றும் கலந்து கொண்ட அனைத்து வாசகர்களுக்கும் எமது வாழ்த்துக்கள்.

- ஆசிரியர் -

## பரிசுக்குரியவர்களின் விபரங்கள் வருமாறு,

எஸ். பாலச்சந்திரன், 215/9 எ ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

பூ' சிறீஸ்காந்தன், 14, புதுவீதி, சுண்டுக்குளி.

கணேசவேல் அபிராமி 25, ஓட்டுமட வீதி' யாழ்ப்பாணம்.

வே. தூயகுமார், 10, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி,

பா. அபர்ணா, ஸ்ரீபத்மம், பலாலி வீதி. திருநெல்வேலி.

யோ. பப்ரிசன் யூட், 45, 4-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

யோ. றதீபன் 15/4, மாரியம்மன் வீதி, யாழ்ப்பாணம்.

க. தபோதரன், 74/16, ஆத்திசூடி வீதி, கந்தர்மடம்.

தீபன், 130, 4-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

ஜெ. ஜனகன், 187/7, கின்னர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

ம. ஜோய்றோஸ், 18, மத்தியூஸ் வீதி. பரழ்ப்பாணம்.

இ. புஸ்பரட்ணம், பல்கலைக்கழகம், திருநெல்வேலி,

சு. கவிதா, 50, வைமன் வீதி' யாழ்ப்பாணம்.

அ. சூரியகுமார், உயரப்புலம், ஆனைக்கோட்டை,

அ. வண்ணபணி, உயரப்புலம், ஆனைக்கோட்டை.

ம. சுதாகரன், 34, சேர். பொன். இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.

க. பத்மலோஜினி, வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

க. அருட்செல்வி, 281/7, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

பே. கஸ்ரோ, 68, 4-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

கோ. பகீரதன், 1-ம் வட்டாரம், நெடுந்தீவு.

சு. சுதர்சன், தெய்வங்கேணி வீதி, யாழ்ப்பாணம்.

க. எழில்அழகன், கரம்பகம், மிருசுவில்.

க. அனிதா, 215, நாவலர் வீதி, யாழ்ந்பாணம்.

க. நகுலநாதன், இலக்கணாவத்தை, உடுப்பிட்டி'

எஸ். ஆர். கந்தசாமி, 64, கண்டி வீதி, ய்ாழ்ப்பாணம்.

என். நீருத்திகா, 9, றக்கா வீதி, யாழ்ப்பாணம்.

இ. மணிவண்ணன், அல்வாய் தெற்கு, அல்வாய்.

வி. சுதர்ஷினி, செம்பாடு, கரவெட்டி.

இ. றமணன், 383/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

க. சாமினா, 60, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

பி. தவச்செல்வநாயகி, 80, 4ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

கா: கயரசன், 179/4, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

த. சந்திரதாஸ், இன்பருட்டி, பருத்தித்துறை.

தி. யோகராசா, மெமோறியல் லேன், யாழ்ப்பாணம்.

கு. நித்தியகலா, 16, மணற்தரை லேன், யாழ்ப்யாணம்.

சி. திவாகரன், அல்லையம்பதி, கரவெட்டி.

மா. பாலமனோகரி, மலர் இல்லம், மானிப்பாய்,

சு. கவிதா, கொத்துக்கட்டி றோட், மானிப்பாய்.

ம. கண்ணதாசன், புத்தூர் வடக்கு, புத்தூர்.

பு. கதிரித்தம்பி, அம்பாள் புடவையகம், புத்தூர்.

இ: பாஸ்கரன், சாரையடி, புலோலி தெற்கு.

சிறிமோகன் கலாநிதி; கல்லூரி வீதி, வட்டுக்கோட்டை.

ந. சூரியகுமார், 68, அச்சுக் கூட வீதி, கொக்குவில்.

ம. மரியரட்ணம், கல்லடி ஒழுங்கை, பருத்தித்துறை.

செ. இரட்ணசிறி, உரும்பராய் தெற்கு, உரும்பராய்.

ஞா. சேனிப்பப்ரிஸ்ற், 41/1 பி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.

அ. கிருஷாந்தி, 5, செபஸ்ரியன் வீதி, குருநகர்.

சு. மாலினி, அற்சிள்சன் வீதி, வட்டுக்கோட்டை.

வே. சுவித்தா, துவாரகை, பழைய வீதி, கோப்பாய் தெற்கு.

த. நிமலன் தம்பசிட்டி, புலோலி தெற்கு பருத்தித்துறை.

ம. மக்ஸன், 37, கொண்டலடி வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.

நா. மாலா, 70, காரைக்கால் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்.

நா. கிருபானந்தராசா, சுய வீடமைப்புத் திட்டம், ஊரெழு மேற்கு, கண்ணாகம்.

இ. சாந்தினி, பிரதான வீதி, சுழிபுரம் தபாற்கந்தோர் அருகாமை

வே. சுபாஜினி, நீர்வேலி, வடக்கு, நீர்வேலி.

செ. கமலாவதி பலாலி றோட், திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.

கு. சண்முகரத்தினம், பாரதி வீதி, சங்கானை.

வே. உருத்திரேஸ்வரன், 'கலாபவனம்', கோணாமலை வீதி, கொககுவில் கிழக்கு,

சி. ககந்தன், யா/புனித ஹென்றியரசர் கல்லூரி, மாரீசன்கூடல், இளவாலை.

நெ. திலாணி, 03, அடப்பன் வீதி, 2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

இ. வசந்தி, பிரதான வீதி, சுழிபுரம்,

கு. நா. விக்கினேஸ்வரன், 'ஸ்ரீராம்' கோப்பாய் வீதி, உரும்பிராய்.

தா. அலெக்ஸ்- அனால்டன். காளுவன், சுளிபுரம்.

தி. சுபாஷினி, காளுவன், சுழிபுரம்.

சி. தர்மானந்தி, பழைய பொலீஸ் ஒழுங்கை, கோப்பாய் தெற்கு.

வே. சுவித்தா, பழைய வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

கா. தனதாகரன், உரும்பிராய் வடசகு, உரும்பிராய். (அவறி வளவு)

சி. வசந்தராாணி, அச்சுவேலி.

இ. திருத்தணிகாசலம், கேணியடி, திருநெல்வேலி, கிழக்கு.

கு. சுபைதா, பழைய தபாற்கந்தோர் வீதி, உரும்பிரால் தெற்கு.

கி. சிவகணேசன், குரும்பை கட்டி, புலோலி வட-மேற்கு, புலோலி.

இ. சுபதீஸ்வரன், கைதடி தெற்கு, கைதடி.

கு. கிரிஜாந்தன், கண்டாவத்தை, கரவெட்டி மத்தி.

இ. பொற்செல்வி, ''சிறுகுடில்'', கரவெட்டி மத்தி, கரவெட்டி.

பொ. அருணகிரிநாதன், இந்திரம்மன் கோயிலடி, துன்னாலை வடக்கு. கரவெட்டி.

கி. சிவசேகரன், மே/பா சி. கிருஷ்ணானந்தன் குரும்பைகட்டி, புலோலி வடமேற்கு.

எஸ். பன்னீர்ச்செல்வம், மே/பா இ. கலையரசி, பிள்ளையார் கோயில் வீதி, கைதடி தெற்கு.

க. கஜேந்தினி, கட்டுடை, மானிப்பாய்.

த. யதீஸ்வரன், தேரிட்டி, அளவெட்டி வடக்கு.

எ. லுமின் கொன்சேகா, சக்கோட்டை. அல்வாய்.

(5ம் பக்கம் பார்க்க)

# சூரியகாந்தி

## எல்லோர் மீதும் போரின் தாக்கம் சுமத்தப்படுகிறது

இனப்போர் ஆரம்பித்து எத்தனையோ வருடங்கள் கடந்து விட்டன. ஒவ்வொரு புதுவருடத்தின் வரவினையும் நம்பிக்கையுடன் எதிர்நோக்கும் சகலரும் இந்த வருடமாவது போர் ஓய்ந்து சமாதானம் மலரும். நாம் நிம்மதியாக வாழலாம் என்றுதான் நினைக்கிறார்கள். அந்த நம்பிக்கை தரும் சிறு உற்சாகத்துடன் - புது வருடத்தில் நம்பிக்கை கொள்ளும் எல்லோருமே மிக மிக விரைவிலேயே இடிந்து போகுமளவிற்கு போரும் தனது முழக்கத்தைக் காட்டி புதுவருடம் கொண்டாடும்.

கடந்து போன வருடங்களைப் போலவே இந்த வருடமும் இரத்தக்கறை படிந்த ஆண்டு என்பதற்கு கடந்து போன முப்பத்தெட்டு நாட்களே போதுமானது. ஒலுமடுவில் தாக்கப்பட்ட உலங்கு வானூர்தி தொடக்கம் தலதா மாளிகை குண்டுத் தாக்குதல், கொழும்புக் குண்டுத் தாக்குதல் என வரலாற்றுப் பக்கங்கள் எல்லாம் இரத்தக் கறை படிந்தவையாகவே புரண்டு கொண்டு செல்கின்றன. நாளாந்தம் எத்தனை மனித உயிர்கள் வீணாகக் கொல்லப் படுகின்றன?

நாட்டில் உள்ள ஒவ்வொருவர் மீதும் போரின் தாக்கம் சுமத்தப் பட்டுக் கொண்டே இருக்கின்றது. வீட்டை விட்டுப் புறப்பட்டுச் செல்லும் ஒருவர் அதே நிலையில் மீண்டும் வீட்டிற்கு வருவாரா என்றால் சந்தேகமே! எங்கேனும் ஒரு மூலையில் அவர் காயப்பட்டோ, மரணித்தோ கிடக்கும் - கிடக்கப் போகும் சூழ்நிலைதான் எமது நாட்டின் சாபக்கேடாகிப் போய்விட்டது!

ஜீவமரணப் போராட்டத்தில் மரத்துப்போன - மரணித்துப் போன உணர்வுகளுடன்தான் மக்களின் மன நிலை இன்று உள்ளது!

யுத்த சூழ்நிலையும் அதன் பூரணமான தாக்கமும் மீளாத அதிர்ச்சியிலேயே மக்களை அமிழ்த்திக் கொண்டிருக்க - அரசியல் சதுரங்கத்தில் மக்கள் தான் பகடைக் காய்களாக உருட்டப் பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஏதாவது ஒரு சம்பவத்தில் கொல்லப்படும் மக்கள் எண்ணிக் கணக்கிடப் பட்டதுமே மறந்து போகப் படுகின்றார்கள்! அந்தச் சம்பவத்தில் தமக்குத் தேவையானவற்றையே மக்களின் பாதுகாவலர் என்போர் பிரச்சாரமாக்கிக் கொள்கின்றார்களே தவிர - மக்களைக் கவனிப்போர் என்று யாருமே இல்லை. அவர்கள் அழிவின் மீதுதான் அத்திவாரம் கட்டத் துடிக்கின்றார்களே தவிர அழிவைத் தடுக்க முன்வரும் எண்ணமே இல்லை.

சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம் என்பது இவர்கள் பாஷையில் சுவரை இடித்தால்தான் சித்திரம் காணலாம் என்பதாகும்!

இவர்களது நோக்கமும், சிந்தனையும் மனிதனையே நோகடித்து விடுகின்றன. இரு தரப்புப் பாதுகாப்பும் வேலியே பயிரை மேய்ந்த கதைதான்.

நிம்மதியை இழந்த மனிதன் அச்சத்துடன் - திகில் நிறைந்த ஒரு போலி வாழ்க்கையைத்தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றான் மனிதனிடத்தில் மனித நேயத்தைத் காண முடிவதில்லை. மண்ணில் காலடி வைக்கும் மனிதன் மரணம் வரை ஓடிக்கொண்டேதான் இருப்பான் - அந்த முடிவான மரணத்திலிருந்து தப்பி விடலாம் என்ற நப்பாசையுடன்.

மரணமும் துரத்திக் கொண்டேதான் இருக்கும் - எருமை மாட்டு எமனாக அல்ல - துப்பாக்கி, குண்டு என்ற நவீன வடிவத்துடன்! இந்த நிலை நீடிக்கத்தான் போகிறதா?

# சொந்த இடங்களில் வாழ விரும்பியே வாக்களித்தனர்

### - ஈ. பி. ஆர். எல். எவ்.

வடக்கு வலிகாமத்திற்கான பிரதேச சபையின் நிர்வாக அலுவல்கள் எங்கு நடைபெறப் போகின்றன. அப்பகுதி மக்கள் எங்கு வாழப் போகிறார்கள் என்பதை அரசு தெளிவுபடுத்த வேண்டும் என ஈ.பி.ஆர்.எல்·எப் வேண்டுகோள் விடுத்துள்ள்து.

மயிலிட்டி மீனவர் தம்து சொந்த இடத்தில் தொழில் செய்ய விரும்புகின்றனர். காங்கேசந்துறை சிமெந்து தொழிற்சாலை இயங்கவேண்டும், விவசாயிகள் சொந்த நிலத்தில் விவசாயம் செய்யவும், மகாஜனாக் கல்லூரி உள்ளிட்ட பாடசாலை மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள் தமது சொந்தப் பாடசாலைகளில் கற்க, கற்பிக்கவும் வழி சமைக்கப்பட வேண்டும் என அவ் வேண்டுகோளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதனைச் செய்ய முடியா விட்டால் இந்தத் தேர்தலால் என்ன பிரயோசனம், என்ற கேள்வி எழுவது இயல்பானதே. ஏனெனில் மக்கள் தம் சொந்த இடங்களில் மீளக் குடியேறமுடியும் என்ற நம்பிக்கையிலேயே வாக்களித்துள்ளனர்.

சாவகச்சேரி, பச்சிலைப் பள்ளி, வடமராட்சி, தென்மேற்கு பிரதேச சபைக்குட் பட்ட பகுதிகளில் அரசின் கட்டுப்பாடில்லாத பகுதிகளில் வாழும் மக்கள் மட்டுப்படுத்தப்பட்டளவு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களை எடுத்துச் செல்லவே அனுமதி உண்டு. கூட்டுறவுத்துறை மற்றும் உணவு, அத்தியாவசியப் பொருட்கள் வினியோகத்துறையுடன் பிரதேச சபைகள் தொடர்பு பட்டிருக்கின்றன. எனவே வறணி, கிளாலி, நாகர் கோயில் போன்ற பகுதிகளுக்கு தங்கு தடையற்ற உணவு அத்தியாவசியப் பொருள் வழங்குவதற்கும் சுலபமான போக்கு வரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட வேண்டும். இவற்றில் இழுபறிகள், கெடுபிடிகள் இருக்குமானால் பிரதேச சபைகள் சரியான முறையில் மக்களுக்கு தமது பணிகளை ஆற்ற முடியாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே தேர்தல் நடாத்துவதில் அரசு எத்தனை ஆர்வம் செலுத்தியதோ அதே அக்கறையுடன் இந்தச் சிக்கல்களை விடுவிப்பதிலும் பிரதேச சபைகள் செயற்டுவதில் உள்ள தடையினை நீக்குவதிலும் ஈடுபாட்டுடன் செயற்படவேண்டுமென ஈ.பி.ஆர். எல்·எப். மேலும் தெரிவித்துள்ளது.

## கோழிகளுக்கு அம்மை நோய்

திருநெல்வேலி கொலனிப் பகுதியிலுள்ள கோழிகள் பல அம்மை நோயின் தாக்கத்திற்குள்ளாகியிருப்பது கண்டு பிடிக்கப் பட்டுள்ளதாக கால் நடை அபிவிருத்தி உதவியாளர் செல்வி வானதி தெரிவித்துள்ளார். மேலும் யாழ்ப்பாணம் கால் நடை வைத்தியசாலையில் கோழிகளுக்கான அம்மைத் தடுப்பு மருந்து ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் வழங்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

## பாலர் பாடசாலைகளுக்கு ஐ.நா.தூதுவராலயம் உதவி

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் பருத்தித்துறை பிரதேச செயலகப்பிரிவில் உள்ள நான்கு பாலர் பாடசாலைக் கட்டடங்களைப் புனரமைப்பதற்கு 5 ல்ட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

பொலிகண்டி பாரதி சனசமூக பாலர் பாடசாலை, அல்வாய் நக்கீரன் சனசமூக நிலைய பாலர் பாடசாலை, குரும்பைக்கட்டி சனசமூக நிலைய பாலர் பாடசாலை தொண்டமானாறு கலைவாணி சனசமூக நிலைய பாலர் பாடசாலை ஆகியனவே புனரமைக்கப்பட்டு வரும் பாலர் பாடசாலைகளாகும். இப்பாலர் பாடசாலைகளின் புனரமைப்பு வேலைகள் பூர்த்தியடைந்துள்ளமையால் வெகு விரைவில் திறந்து வைக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஊக்குவிப்பு

சுன்னாகம் தெற்குப் பிரதேசத்தில் வீட்டுத் தோட்ட பயிர்ச்செய்கை ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்படி வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கைக்கெனத் தெரிவு செய்யப்பட்டுள்ள 37 பேருக்கு பயிர்ச் செய்கை உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சுன்னாகம் தெற்கு விவசாயிகள் சம்மேளனத்தின் அனுசாளையுடன் நடைபெற்ற இந்நிகழ்வில் கெயர் நிறுவனப் பிரதிநிதிகள் கலந்து கொண்டு பூவாளி, கிண்டி முதலிய உபகரணங்களை வழங்கினர். சம்மேளனத் தலைவர் க. தியாகலிங்கத்தின் மேற்யர்ர்வையில் வீட்டுத் தோட்டச் செல்கை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## வவுனியாவில் வெள்ளை வாகனங்களைக் கண்டு அச்சம்

வவுனியாவில் இளைஞர் ஒருவர் வெள்ளை வான் காரர்களினால் கடத்திச் செல்லப்பட்டார். வன்னிப் பகுதியில் இருந்து வெளிநாடு செல்வதற்காக வவுனியா ஆசைப் பிவ்ளையார் குளம் இரண்டாம் குறுக்குதெருவில்வசித்து வந்த கணபதிப்பிள்ளை தவராசன் என்னும் இளைஞரே இவ்வாறு வெள்ளை வான் காரரால் கடத்திச்செல்லப் பட்டவராவார்.

இவர் பற்றி தவவல் அறிய உறவினர் எடுத்த முயற்சிகள் எதுவும் பயன் அளிக்கவில்லை என இராணுவத்தினரும் பொலிசாரும் தாம் இவரைக் கைதுசெய்யவில்லைஎன கூறுகின்றனர். எனவே இவ் இளைஞர் கடத்திச் செல்லப் பட்டுவெள்ளைவான்காரரால் கொல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகின்றது'

## தையல் பயிற்சி

(சுன்னாகம்)

சுன்னாகம் தெற்கு சிக்கன கடனுதவி கூட்டுறவுச்சங்க மகளிர் பிரிவினர் அப் பிரதேசத்திலுள்ள யுவதிகளுக்கு தையல் மற்றும் கேக் ஐசிங் வகுப்புகளை நடாத்தி வருகின்றனர்,

ஒரு தொகுதி யுவதிகளுக்கு பயிற்சி முடிந்ததும் அடுத்த தொகுதி யுவதிகளுக்குப் பயிற்சியளிக்கப்படும் என மகளிர் குழுத் தலைவி செல்வி விமலராணி தெரிவித்துள்ளார்.

## ஆண்டுவிழா

தெல்லிப்பளை துர்க்கா துரந்தரி ஆச்சிரம 16வது ஆண்டு நிறைவுவிழா இம் மபதம் 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மருதனார்மடம் இராமநாதன் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவியான செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமை தாங்குவார். யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானத்துறைப் பேராசிரியர் வி, கே. கணேசலிங்கம் சிறப்பு விருந்தினராகக்கலந்து கொள்வார்.

விழாவின் ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தம்பிரான் அவர்கள் வழங்குவார். பரிசளிப்பு, கலை நிகழ்வும் சிறப்பு நிகழ்ச்சிகளாகும். இத்துடன் மகேசுர பூஜையும் இடம்பெறும்.

## புராண படனம்

பருத்தித்துறை,

அருள்மிகு தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் கந்த புராண படன படிப்பு இம் மாதம் 10ம் திகதி ஆரம்பமாகின்றது. 10-04-98ல் வள்ளி திருமண கல்யாணப் படிப்பும் 11ம் திகதி அன்னதானமும் 12ம் திகதி வைரவர் மடையும் நடைபெறுமென ஆலய வழிபடுவோர் சங்கம் அறிவித்துள்ளது.

## பரிசுப் போட்டி...

ச. சுதாகரன்,
பெரியவளவு,
தும்பளை மேற்கு,
பருத்தித்துறை.

த. வரதன்,
அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

சு. சிவாகரன்,
பழைய ஆஸ்பத்திரி ஒழுங்கை.
கரவெட்டி மேற்கு;
நெல்லியடி.

ச. சசீனா
செல்வஜோதி, அல்வாய்.

க. தவராசா.
துன்னாலை மேற்கு
வாய்க்கால், கரவெட்டி.

சி. முகுந்தன்,
'கோமேதகம்'
அவ்வாய்,வடக்கு, அல்வாய்.

மா. கணேசபாதம்,
துறையாமூலை,
புலோலி தெற்கு, புலோலி.

வ· கோபாலகிருஷ்ணன்,
பிரதான வீதி, மந்திகை,
புலோலி.

கே. றஜனி,
மெமோறியல் ஆங்கில
பாடசாலை, மானிபபாய்.

# வவுனியாவில் பேரணி
# புளொட் தீர்மானம்

(வவுனியா)

புதியதாக வவுனியாவில் அறிமுகம் செய்யப்பட்ட 'பாஸ்' முறையினால் பொது மக்கள் கஷ்டங்களை அனுபவிப்பதாலும் தமது விருப்பத்திற்கு மாறாக அகதிகளின் முகாமில் அடைக்கப்பட்டுள்ள மக்கள் தமது விருப்பத்திற்கு உகந்த இடங்களில் வதிய அனுமதி அளிக்கவேண்டும் என்றும் அவ்வாறு அனுமதி அளிக்கத் தவறும் சமபத்தில் ஒரு வெகுசன போராட்டத்தை தாம் மேற்கொள்ளப்போவதாக புளொட் அமைப்பு தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு என்ற போர்வையில் மக்கள் மீது 'பாஸ்' என்ற நோக்கில் அழுத்தத்தை ஏற்படுத்துவதும் தமது உரிய இடங்களுக்குச் செல்ல மறுப்புத் தெரிவிக்கப்படுவதும் மக்களுக்குத் தொடர்ந்து பாதிப்பு ஏற்படுத்த முடியாது என்றும் ஆகவே இவை முடிவுக்கு கொண்டுவரவே இவ் வெகுசன போராட்டத்தை தாம் நடத்த திட்டமிட்டுள்ளதாகவும் வவுனியா நகர பிதா டி. லிங்கநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வவுனியாவில் இது விடயமாகச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்திய பிரதி நிதிகளிடம் இக் கருத்து தெரிவிக்கப்பட்டது.

## சுன்னாகம் கடைகளை திறப்பதற்கு முயற்சி

சுன்னாகம் பிரதேசத்தில் மேலும் ஒருபகுதி பிரதேசம் மக்கள் இராணுவ பாவனையிலிருக்கு விவக்கப்பட்டதையடுத்துஅப் பகுதிக் கடைகள் மீளத் திறககப்பட இருக்கின்றன. கே. கே. எஸ். வீதியில் பழைய பொலிஸ்நிலையத்தை அண்டிய பகுதியில் இராணுவத் தடையரண்களும் முகாமும் காணப்பட்டதால் இதுவரை காலமும் அப்பகுதி மக்கள் பாவனைக்கு அனுமதிக்கப்படவில்லை.

இராணுவ வெளியேற்றத்தை அடுத்து அப்பகுதியில் இருந்த சுமார்25 ஓடைகளும்மற்றும்வீடுகளும் மக்கள் பயன்ாாட்டிற்கு வந்துள்ள. ஏற்கனவே சில கடைகள் திறக்கப்பட்டுள்ளன. ஏனையவற்றையும் திறப்பழிற்கான நடவடிக்கைகள் மேற்கொல்ளப்பட்டு வருகினறன.

## படையை விட்டு விலகியோர் மீண்டும் சேர வாய்ப்பு

ஆயுதப்பவட, பொலீஸ் ஆசியவற்றில் இருந்து வெளியேறியவர்கள் மீண்டும் அவற்றில் சேர்ந்து கொள்ள வேண்டுமென ஜனாதிபதி கந்திரிக்கா பண்டார நாயக்கா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சுதந்திரப் பொன் விழாக் காலத்தில் நாட்டின் ஐக்கியத்தையும், சமாதானத்தையும் பாதுகாக்க இவர்கள் முன்வர வேண்டும். எனக் கேட்டுக் கொண்ட ஜனாதிபதி மீண்டும் சேவைக்குத் திரும்புபவர்கள் மீது விசாரணையோ, தண்டனையோ இல்லாமல் சேர்த்துக் கொள்யப்படுவார்களெனவும் தெரிவித்துள்ளார்

## சீமெந்து தட்டுப்பாடு

யாழ்நகரில் மீண்டும் சீமெந்தின் விலை அதிகரித்துள்ளது. தற்போது ஒரு பைக் கற் சீமெத்து 530 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது. கடந்த வாரம் ஒருபைக்கற் சீமெந்து 375 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## இலவச கப்பல் சேவை; ஆனால் பொருள் விலை மாற்றமில்லை

யாழ்ப்பாணத்திலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், அரச கூட்டுத்தாபன விற்பனை நிலையங்களில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரிகள் திடீர் பரிசோதனையை மேற்கொண்டு வருகின்றனர.

இத்திடீர்ப் பரிசோதனை மூலம் கப்பற் கட்டணமின்றிக் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்ட பொருள்களின் விலை முன்னைய விலைகளை விடச் சிறிய அளவிலேயே குறைக்கப்பட்டுள்ளதை நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரிகள் அவதானித்துள்ளனர்.

வடபகுதி புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையினால் கப்பல் கட்டணம் பொறுப்பேற்கப்பட்ட போதிலும், பொருட்களின் விலையில் வீழ்ச்சி ஏற்படாததையிட்டு பாவனையாளர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுஸ்தாபனங்களில் விற்பனை செய்யப்படும் பொருட்கள் உயர் விலையில் விற்கப்பட்டால், அல்லது பாவனையாளர்களுக்குப் பங்கீட்டுமுறையில் விற்கப்படாது தனியார் வியாபாரிகளுக்கு மொத்தமாக விற்பனை செய்யப்பட்டால் அது பற்றி பாவனையாளர்கள் யாழ் செயலகத்துக்கு அறிவிக்கமுடியுமெனவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## நேற்று...

பொலிசாரினால் கண்டெடுக்கப்பட்டு மாலை யாழ். போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது,

இந்த நான்கு சடலங்களும் விடுதலைப் புலிகளின் சடலங்கள் என பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## வவுனியா...

தென்பகுதிகளுக்கு வெளியேறுவதற்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகவும் இதனை கண்டித்து தமது நிலைப்பாடு குறித்து நேற்று முன்தினம் வவுனியா பிரதேச செயலரிடம் முறையிட்டுள்ளதை தொடர்ந்து தான் உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வருவதாகவும் அவர்களின் முடிவை எம் மக்களுக்கு அறிவிப்பதாகவும் தெரிவித்ததை தொடர்ந்து இன்று சந்திப்பு ஏற்பாடானது.

## விமான...

அனுமதிக்கப்பட்டபின் இறந்தவர் கொம்பனித்தெருவைச் சேர்ந்த சுரேஸ்குமார்ன் (33 வயது) எனவும் இனங்காணப்பட்டுள்ளதாக விமானப்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இக்குண்டுத் தாக்குதலில் பத்துப் பேர் கொல்லப்பட்டதும் மூன்று பேர் காயமடைந்ததும் தெரிந்ததே. இதனைத் தொடர்ந்து கொழும்பு மாநகரின் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டுன்ளது.

## மட்டு கைதிகள் பூசாவுக்கு

மட்டக்களப்பு சிறைச்சாலையிலுள்ள கைதிகளை பூஸாவுக்கு இடம்மாற்றப்பட்டுள்ளனர். இவர்களில் அனேகமானோர் எதுவித குற்றச்சாட்டுகளுமின்மி நீண்ட காலமாகத் தடுத்துவைக்கப்பட்டிருப்பவர்கள்.

இவர்களுக்கான வழக்குகளும் மட்டக்களப்பு நீதிமன்றத்திலேயே பாரப்படுத்தப்பட்டருந்தன. கைதிகன் அனைவரும் சங்கிலியால் பிணைப்பட்டு பஸ்ஸில் ஏற்றி பூசாவுவுக்குக் கொண்டு செல்செல்ளப் பட்டுள்ளனர் இக் கைதிகளில் அனேகமானோர் திருமண மானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழ் மாநகர கரையோரத்தில்
## இரவு மீன் பிடிக்க அனுமதிக்க கூட்டணி வேண்டுகோள்

மீனவாகளின் பிரச்சனை குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கடந்த இரு தினங்களாக ய்ாழ். நகர இராணுவத் தளபதி சுசுந்த மெண்டிஸ், மேஜர் ஜெனரல் லயனவ் பலேகல்ல ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். இப் பேச்சுவார்த்தையின் போது மீனவர்களின் வாழ்க்கை நிலை, மீன்பிடிப்பதில் மீனப்வர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள், மீள்க்குடியமர்த்தல், புனர்வாழ்வு நடவடிக்கைகள். பிடித்த மீனை விற்பனை செய்வதிலுள்ள சிரமங்கள் ஆகியன குறித்து கலந்துரையாடப்ப்பட்டது.

இக் கலந்துரையாடலில் த. வி. கூட்டணி சார்பில் முன்னாள் பா. உ மாவை சேனாதிராசா, த வி கூ சட்டத்துறைச் செயலாளர் சிவபாலன் ஆகியோர் கூட்டணி சார்பில் பங்குபற்றினர். இச் சந்திப்பின்பேபது யாழ் மாநகரக் கரையோரப் பகுதிகளில் மாலையில் மீன் பிடிக்கச் சென்று காலையில் வர அனுமதிக்க வேண்டுமென்றும் அப்படியில்லாத பட்சத்தில் அதிகாலை 4-00 மணிக்கு மீன் பிடிக்கச் செல்ல அனுமதிக்க வேண்டுமென்றும் கூட்டணியினர் கேட்டுக்கொண்டனர்-

இப் பிரச்சினைகள் சம்பநதமாக குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணியினர் இராணுவ அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் திரு மாவை சேனாதிராஜ்ா இராணுவ அதிகாரிகளிடம் தெரிவித்தார்' இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளனர்,

## சான்றிதழ் வழங்கல்

கடந்த வருடம் கார்த்திகை, மார்கழி மாதங்களில்' யினிசெவ், உதவியுடன் தொண்ட்ர்கலுக்காக நடாத்தப்பட்ட ஆரம்ப சுகாதார பரர்மரிப்பு பயிட்சியில் பங்குபற்றி பரிட்சையில் சித்தியடைந்தவர் கழுக்ஞன சான்றிதல்கழ் வழங்கும் வைபவம் எதிர்வரும் 14,02-98 காலை 8. 50 மணிக்கு நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது எஉ யாழ் மாநகரசவை சுகாதார

## கட்டாக் காலிகன் தொல்லை

பருத்துறை தம்பசிட்டி, புலோலிப்பகுதிகலில் கட்டகளிகன் தொல்ளை அதிகரித்துள்ளது' கட்டாக் காலி ஆடு மாடுகள் பயிர்கழல நாசம் செய்வதாகவும் இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்படுவநாக இப்பகுதி விவசாயிகள் தெரிவி த்துனுளனர்

## சமாதானம்...

எனவேதான் சமாதானம் ஒன்று முக்கியமானது என்பதை எமது நாடு வலியுறுத்தி வருகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்,

## கிளிநொச்சி...

வில் முன்னேற்ற முயற்சியை மேற்கொண்டனர். முன்னேற்றத்தை மேற்கொண்ட படையினர் மீது மாலை 5 மணி வரை விடுதலைப் புலிகள் தாக்குதல்மேற்கொண்டனர். இத்தாக்குதலில் 14போராளிகள் வீரச்சாவடைந்ததாக புலிகளின் குரல் மேலும் தெரிவித்தது.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்.

ஆர். பி. ஜி 2, 40 எம், எம். பிஸ்டல் 3, 66 - 2- 3' ரி.56-1 - 2, ரி - 81 - 2-1, ரி-56 - 8 - , பிகே' பரல்கள் - 2, ஆர் பி ஜி கஷய்- -2, பி. கே ரவைகஅ-1745 (இணைப்பிகளுடன்).


வனத்தடாகத்தில்

பிரதிபலித்த மழைமேக வானத்தின்
வண்ண எழிலை வேட்கையுடன் விபரித்தாள்
நினைவை விட்டு அகலாத
அந்த எழில் வண்ணத்தில்
நகை அணியும் பேரார்வம்
அவன் குரலில் பிரதிபலித்தது...

சிறிநதியா

நகைமாடம்

வண்ண, வண்ண நகைகளின் நகைக்கூடம்
(மீண்டும், மீண்டும் செல்லத்தூண்டும்
காண்போர் மயங்கும் காட்சிக்கூடம்)

சிறிநதியா நகைமாடம்
இல. 2 ஜி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

இணை நிறுவனம்:-
சிறிநதியா நகைமாடம்
56, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சிறிரூபா நகைமாடம்
113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



கபிலா
காலணி அகம்

BATA
D.S.I
RANPA
SEEBA

வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட அனைத்து
காலணி வகைகளையு பெற்றுக் கொள்ள
நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்
4 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


''சூரிய காந்தி'' நிறுவனத்துக்காக அவர்களது அச்சகத்தில் 1998ம் ஆண்டு பிப்ரவரி 8ம் தேதி 68, ராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. ஆசிரியர்: சு. குமாரசுவாமி.